(குறுக்கீடு) வேறு விதமாக நாளையோ, நாளை மறுநாளோ நீங்கள் என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் கொண்டுவர முடியும். (குறுக்கீடு) விதியில் அப்படித்தான் இருக்கிறது. (குறுக்கீடு) விதியில் எனக்குக் கொஞ்சமாவது இடம் இருந்தால் இப்பொழுது உங்களை அனுமதித்திருப்பேன். (குறுக்கீடு) நீங்கள் அன்று கேட்டதற்கு "அதற்கு சம்பந்த மில்லை" என்று சொன்னீர்கள். "அதற்கு சம்பந்தம் இருக்கிறது" என்பதை மாண்புமிகு முதலமைச்சர் தெரிவித் திருக்கிறார்கள். விதி 110-இன் கீழ் வைக்கப்படுகிற அறிக்கையின்மீது, பர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்ற வகையில் தெரிவிப்பதற்கு இந்த நேரத்திலே வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) இல்லை, வேண்டாம்.

(ஆ) ஊதியக் குழு பரிந்துரைகளால் ஏற்பட்டுள்ள முரண் பாடுகள் பற்றிப் பரிசிலித்த அரசு அலுவலர் குழு வின் பரிந்துரைகளின்மேல் அரசு எடுத்துள்ள முடிவுகள் குறித்து.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஊதியக் குழு பரிந்துரைமீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய அறிக்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 1988 ஆம் ஆண்டு ஐந்தாவது ஊதியக் குழு தலைவர் ஆட்சிக் காலத்தில் குடியரசுத் ஏற்படுத்தப்பட்டது. ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படை யில் 1989 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன. ஐந்தாவது ஊதியக் குழுவின் முக்கிய மான பரிந்துரை, மேல் மட்டத்தில் சில பிரிவினர்கள் தவிர, இதர பிரிவினர்களுக்கு, மத்திய அரசுக்கு இணை யான ஊதிய விகிதங்கள் வழங்கலாம் என்பது தான். இதன் அடிப்படையில் அரசு சில மாற்றங்களைச் செய்து வெளியிட்ட ஆணைகள்மீது பல அலுவலர் சங்கங்களும் அலுவலர்களும் பல்வேறு கோரிக்கைகளைத் தொடர்ந்து எழுப்பி வருகின்றனர். அத்துடன் புதிய ஊதிய விகிதங் களை அறிமுகப்படுத்தியதால் ஏற்பட்டுள்ள முரண்பாடு களைக் களைய வேண்டும் என்றும் பல கோரிக்கைகள் அரசுக்கு வந்துள்ளன.

குறிப்பாக அமைச்சுப் பணியாளர்கள் தங்களுடைய ஊதிய விகிதங்களில் பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தொடர்ந்து வாதாடி வருகிறார்கள். முன்பு

இளநிலை உதவியாளர் ரூ. 610—1075 என்ற ஊதிய விகிதத்தில் இருந்தார். அந்த ஊதிய விகிதத்தில் இடைநிலை ஆசிரியரும் இருந்தார். மத்திய அரசுக்கு இணையாக ஊதிய விகிதங்களை அறிமுகப்படுத்தும்பொழுது, இளநிலை உதவியாளர்கள் ரூ. 975—1660 என்ற விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டனர். அந்த நேரத்தில் இடைநிலை ஆசிரியர்கள ரூ. 1200—2040 என்ற ஊதிய விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டனர். இது போன்றே இதர அமைச்சுப் பணியாளர் பிரிவினர்களிடையேயும் பல முரண்பாடுகள் உள்ளன என்றும் பழைய ஊதிய விகிதத்தில் ஒரே நிலையில் இருந்தவர்களுக்கு புதிய ஊதிய விகிதத்திலும் அதே நிலையை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைக் கொடுத்துள்ளார்கள்.

அமைச்சுப் பணியாளர்களின் கோரிக்கைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க அரசு அலுவலர் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்தக் குழுவிடம் இப்பணியை ஒப்படைக்கும்பொழுது, அமைச்சுப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை மேம்படுத்துவது சம்பந்தமாகவும் பதவி உயர்வுகள் சம்பந்தமான கோரிக்கைகளையும் ஆராயப் பணிக்கப்பட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற உடன் இந்த அரசு அலுவலர் குழு, ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஊதிய விகிதங்களில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் முழுவதையும் ஆராய்ந்து கருத்துக்களைத் தெரிவிக்குமாறு பணிக்கப்பட்டது.

அரசு அலுவலர் சங்கங்களின் பிரதிநிதிகள் என்னை சென்ற 2—3—1992 அன்று சந்தித்து விவரமாக அவர்களுடைய கோரிக்கைகளை என்னிடம எடுத்துச் சொன்னார்கள். அவர்களது கோரிக்கைகள் அனைத்தையும் அரசு அலுவலர் குழு பரிசீலனை செய்யும் என்றும் தெரிவித்தேன். அதன் அடிப்படையில் இந்த அரசு அலுவலர் குழு அமைச்சுப் பணியாளர்களின் ஊதிய விகிதங்களை மேம்படுத்துதல், அவர்களுடைய பதவி உயர்வு சம்பந்தமான கோரிக்கைகளைப் பரிசீலித்தல் மற்றும் இதர பிரிவினர்களின் ஊதிய விகிதங்களில் உள்ள முரண்பாடுகளைப் பரிசீலித்தல் போன்ற பணிகளைச் செம்மையாக ஆராய்ந்து அதனுடைய அறிக்கையை அரசுக்கு வழங்கியுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் அரசு எடுத்துள்ள முடிவுகளை இப்பேரவையில் இன்று தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒரே விகிதத்தில் இருந்த அலுவலர்கள் வெவ்வேறு புதிய ஊதிய விகிதங்களைப் பெறும்பொழுது அவர்களின் மத்தியில் தயக்கமும் பணியில் சோர்வும் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டும், அனைத்து அரசு அலுவலர்களை யும் உற்சாகத்துடன் பணியாற்றச் செய்ய வேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலும் அமைச்சுப் பணியாளர்களைப் பொறுத்தவரை ஒரு மாபெரும் சீர மைப்புத் திட்டம் ஒன்றினைச் செயலபடுத்த இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

அதன் விவரங்களை நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன். அமைச்சுப் பணியாளர்களிடைடிய நிலவி வந்த முக்கியமான பிரச்சினை, பல ஆண்டுகளாக அவர்களுடைய பதவி உயர்வில் நிலவி வந்த தேக்க நிலைதான். இதனைப் போக்கி ஒரே சீராக அனைத்துத் துறைகளிலும் அவர் களுக்குப் பதவி உயர்வு கிடைக்குமாறு வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்று எங்கள் அரசு முடிவு செய்துள்ளது.

தற்போது பல துறைகளில் ஒரு உதவியாளருக்கு 3 அல்லது 4 இளநிலை உதவியாளர்கள் என்ற விகிதத்தில் இருக்கின்றார்கள். இதனை மாற்றி ஒரே சீராக அனைத்துத் துறைகளிலும் 2 உதவியாளர்களுக்கு ஒரு இளநிலை உதவி யாளர் என்ற பணி விகிதாச்சாரம் கொண்டு வரப்படும். இதனால் 11,854 இளநிலை உதவியாளர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி.)

முற்பகல் 11-00

அதே போல பல துறைகளில் ஒரு கண்காணிப்பாளரின் கீழ் பத்து அல்லது பதினைந்து உதவியாளர்கள் அல்லது இளநிலை உதவியாளர்கள் பணிபுரிந்து வரும் நிலை இருக்கிறது. இதனை ஒரே சீராக மாற்றி அனைத்து துறைகளிலும் ஒரு கண்காணிப்பாளரின் கீழ் ஐந்து உதவி யாளர்கள் அல்லது ஐந்து இளநிலை உதவியாளர்கள் என்று பணி விகிதாச்சாரம் கொண்டு வரப்படும். இதனால் 2050 உதவியாளர்களுக்கு கண்காணிப்பாளர் பதவி உயர்வு கிடைக்கும். (மேசையைத் தட்டும் ஒலி.)

அலுவலக மேலாளர், ஆஃபீஸ் மானேஜர். ரூ. 1820—3200 என்ற ஊதிய விகிதத்தில் தற்போது 250 பணி யிடங்கள் இருக்கின்றன. இந்த ஊதிய விகிதத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது.

1992 ஏப்ரல் 23] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

இந்த கோரிக்கையை ஏற்று ரூ. 2000—3200 என்ற புதிய விகிதத்தை வழங்க இந்த அரசு தீர்மானித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி.)

பல துறைகளிலும் அமைச்சுப் பணியாளர்கள், மேலாளர் பதவிக்கு மேல் செல்ல முடியாத சூழ்நிலை தற்போது நிலவி வருகிறது. இவர்களுக்கு பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் அனைத்துத் துறைகளிலும் அந்தந்த துறைகளில் உள்ள மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கீழ்க் கண்டவாறு உயர் பதவிகள் தோற்றுவிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை நூற்றுக்குக் கீழே என்றால் தோற்றுவிக்கப்படும் புதிய பணியிடங்கள் ஒரு அலுவலக மேலாளர்.

அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை நூற்றுக்கு மேல் 500-க்குக் கீழ் என்றால் தோற்றுவிக்கப்படும் புதிய பணியிடம் ஒரு உதவி இயக்குநர்.

அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 500-க்கு மேல் 2,500-க்குக் கீழ் என்றால் தோற்றுவிக்கப்படும் பணியிடம் ஒரு துணை இயக்குநர்.

அலுவலர்களின் மொத்த எண்ணிக்கை 2,500-க்கு மேல் இருந்தால் தோற்றுவிக்கப்படும் புதிய பணியிடம் ஒரு இணை இயக்குநர். இந்த புதிய பணியிடங்களில் அமைச்சுப் பணியாளர்களே பணி அமர்த்தப்படுவார்கள்.

அமைச்சுப் பணியாளர்கள் பரவலாக பயன்பெறும் வகையில் நான் அறிவித்துள்ள இந்தத் திட்டத்தின் வாயிலாக 14000 அரசு அலுவலர்கள் பயன் அடைவார்கள். இந்த பதவி உயர்வு அளிக்கும் திட்டம் உடனடியாகத் தொடங்கப்பட்டு படிப்படியாக அடுத்த மூன்று ஆண்டுக் காலத் திற்குள் முழுமையாக முடிக்கப்படும். இத்திட்டத்தினால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 10 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

அமைச்சுப் பணியாளர்களைப் பொறுத்தவரை அவர் களின் விகிதங்களில் மேலும் மேம்பாடு செய்வதற்கு பல இடர்பாடுகள் இருக்கின்றன என்று அரசு அலுவலர் குழு தனது கருத்தைத் தெரிவித்தபோதிலும் அமைச்சுப் பணி யாளர்களின் நிலையை உணர்ந்த எங்கள் அரசு அவர்களுக்கு

உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்தப் புதிய பதவிகளைத் தோற்றுவிக்கவும், உயர்த்தவும் மேற்கூறிய சீரிய திட்டத்தினைக் கொண்டு வந்துள்ளது. இத்திட்டத்தினை அமைச்சுப் பணியாளர்களும், அலுவலர் சங்கங்களும் முழுமையாக வரவேற்பார்கள் என்று நம்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

அரசு அலுவலர் குழு, 1,054 பணியாளர் பிரிவினர்களிடமிருந்து வந்த கோரிக்கை மனுக்களைப் பரிசீலனை செய்து, அதில் 214 பணியாளர் பிரிவினர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு, ஊதிய விகிதங்களில் சில மாற்றங்கள் செய்ய பரிந்துரை செய்துள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட அரசுப் பணியாளர்களின் ஊதிய விகிதம் உயர்த்தி நிர்ணயிக்கப்படுகிறது.

தொழிற்பணி பதவிகளான – (Trade Posts), Blacksmith, Carpenter, Moulder, Plumber, Mechanic (Diesel), Mechanic (Tractor), Welder, Wireman, Painter, Mechanic (Motor Vehicles) போன்ற பதவிகளுக்கு தற்போதுள்ள ஊதிய விகிதமான ரூ. 825—1200-ஐ ரூ. 950—1500 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

சுருக்கெழுத்து தட்டச்சர்/நேர்முக எழுத்தர் (Steno-typist/Peronal Clerk பதவிகளுக்கு பணி விதிகள் திருத்தியமைக்கப்பட்டபின் ரூ. 1200—2040 என்ற ஊதிய விகிதம் வழங்கப்படும்

கல்லூரிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள Laboratory Attender, Laboratory Assistant பதவிகளுக்கு தற்போதுள்ள ஊதிய விகிதமான ரூ. 825—1200-ஐ ரூ. 950—1500 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

தொழிற் பயிற்சி நிலையங்களில் உள்ள பயிற்சி அலுவலர் பதவிகளுக்கு தற்போதுள்ள ஊதிய விகிதமான ரூ. 1800—3200 ஐ ரூ. 2000—350 ஆக உயர்த்தி வழங்கப்படும்.

முற்பகல் 11-05

மீன்வளத்துறையில் மீன்துறை ஆய்வாளர் மற்றும் ஆராய்ச்சி உதவியாளர் பதவிகளுக்கு தற்போதுள்ள ஊதிய விகிதமான ரூ. 1820—3200-ஐ ரூ. 2000—3500 ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையை தட்டும் ஒலி.)

நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை, பொதுப் பணித்துறை போன்ற பல்வேறு துறைகளில் உள்ள Overseer, Junior drafting Officer, Technical Assistant பதவிகளின் தற்போதைய ஊதிய விகிதமான ரூ. 1200—2040-ஐ ரூ. 1350—2200 ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

மேற்கூறிய ஊதிய உயர்வுகளினாலும், இதர சில ஊதிய விகித மாற்றங்களினாலும் அரசின் அமைச்சுப் பணியாளர்களுக்கான புதிய பதவி உயர்வு திட்டங்களினாலும் 28,300 அரசு அலுவலர்கள் பயன் அடைவார்கள் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த ஊதிய விகிதங்களில் உள்ள மாற்றங்கள் 1—6—1988-லிருந்து, அதாவது ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்திய நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டு பணப்பயன் (Monetary benefit) 1—4—1992 முதல் அரசு அலுவலர்களுக்கு வழங்கப்படும்.

அரசு அலுவலர்களின் நலனைப் பேணிக் காக்கும் எங்கள் அரசு தற்போதைய கடுமையான நிதிநிலைமையிலும்கூட இந்த முடிவுகளை அமல் செய்வதால் ஏற்படும் கூடுதல் செலவினமான 11.06 கோடி ரூபாயை ஏற்றுக்கொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

4. கவன ஈர்ப்பு

(அ) ஓமலூர் வட்டம், டேனிஷ்பேட்டைப் பகுதியில் சரபுங்கா ஆற்றின் வெள்ளத்தினால் விளை நிலங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. கிருஷ்ணன். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. கிருஷ்ணன்.

திரு. சி. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஓமலூர் வட்டம், டேனிஷ்பேட்டைப் பகுதியில், சரபுங்கா ஆற்றில் ஏற்பட்ட வெள்ளத்தினால் விளை நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த'' அவசரப்